# புதுச்சேரி அரசு

## துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2024** **28 ஜனவரி, 2025**

## பத்திரிகை செய்தி

தினமலர் “பட்டம்” வினாடி வினா விருது நிகழ்ச்சி ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் உள்ள டாக்டர் ஏபிஜே. அப்துல் கலாம் கலையரங்கத்தில் இன்று(28-01-2025) நடைபெற்றது.

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக நிகழ்ச்சியில் பங்கேற்று, வினாடி வினா போட்டிகளில் மாநில-மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பித்தார்.

தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் மற்றும் மேனாள் உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. V. ராமசுப்ரமணியன், ஆச்சார்யா கல்விக் குழுமத்தின் மேலாண் இயக்குநர் திரு J. அரவிந்தன் மற்றும் தினமலர் நிர்வாக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரை…

அனைவருக்கும் என்னுடைய வணக்கம். தினமலரின் பட்டம் வினாடி வினா விருது நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள புதுச்சேரி மற்றும் அதைச் சுற்றி உள்ள மாவட்டங்களில் இருந்து மாணவர்கள், ஆசிரியர்கள் வந்திருக்கிறீர்கள். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசு பெற காத்து இருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்த நிகழ்ச்சியில் கலந்த கொள்வதற்கு முக்கியமான ஒரு காரணம் இருக்கிறது. ஏனென்றால், இது போன்ற நிகழ்ச்சி மாணவர்கள் தன்நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள உதவும்.

இந்த பட்டம் பத்திரிகை தமிழ்நாடு - புதுச்சேரியில் உள்ள லட்சக்கணக்கான மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்கிறது என்று அறிகிறேன். அதற்காக அதன் நிர்வாகிகளை நாம் பாராட்டுகிறேன். ஏனென்றால், மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துவது மட்டும் அல்லாமல் அவர்களுடைய சிந்தனைத் திறன், உலக அறிவு, தகவல் தொழில்நுட்பம் போன்ற அனைத்து தகவல்களையும் மாணவர்கள் அவர்களுடைய  தாய் மொழியிலேயே தெரிந்து கொள்ள உதவியாக இருக்கிறது.

மாணவர்கள் தாய்மொழியில் படிக்கும்போது அந்த அறிவு அவர்கள் மனதில் பசுமரத்தில் ஆணி அடிப்பது போல பதிந்து விடும். இந்த அறிவு தான், மாண்புமிகு பாரத பிரதமர் நரேந்திர மோடி சொல்வதைப் போல, மாணவர்கள் பாட புத்தகங்களைக் கடந்து - உலகியல் அறிவை வளர்த்துக் கொண்டு, வகுப்பறையில் இருந்து உலக அரங்கிற்கு செல்ல பாதை போட்டுத் தரும்.  அதனால் தான் மத்திய அரசு கொண்டு வந்த புதிய கல்விக் கொள்கையில் தாய்மொழி வழி கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட்டு இருக்கிறது.

மாணவர்கள் தான் ஒரு நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்கிறார்கள். ஒரு நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் அந்த நாட்டில் உள்ள மாணவர்களின் அறிவுத் திறன், முயற்சி, உழைப்பு இதை பொறுத்து தான் அமைகிறது.

இந்தியா தனது 100வது ராக்கெட்டை நாளை ஜனவரி 29 ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி தளத்தில் இருந்து ஏவுகிறது என்று சொன்னால் உங்களைப் போன்ற மாணவர்களின், இளைஞர்களின் அறிவுத் திறன்தான் அதற்கு காரணம் மாணவர்கள் தான் எதிர்கால இந்தியாவின் விடிவெள்ளிகள். அதனால்தான் “வளர்ச்சி அடைந்த பாரதம் 2047” VIKSIT BHARAT 2047 என்ற இலக்கோடு நாட்டை வழிநடததிக கொண்டிருக்கும் தொலை நோக்கும் பார்வை கொண்ட நமது பாரத பிரதமர் பல நிகழ்ச்சிகளில் நாடு முழுவதும் உள்ள மாணவர்கள் இடத்தில் அதிகம் கலந்துரையாடுவார். நாம் அடிக்கடி தொலைக் காட்சிகளில் செய்தித் தாள்களில் அதைப் பார்க்கிறோம். மாணவர்கள், இளைஞர்கள் தான் அவர்களுடைய அறிவாலும், உழைப்பாலும், திறமையாலும் பாரத நாட்டை உலக அரங்கில் வெற்றி பெற செய்கிறார்கள்.

தவிர்க்க முடியாமல், இன்றைய மாணவர்கள் MOBILE PHONE-களில் அதிகம் மூழ்கிப் போகிறார்கள். MOBILE PHONE-களால் பல நன்மை இருக்கிறது. ஆனால் அதில் மாணவர்களுக்கு கவனச் சிதறல் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆனால், பட்டம் போன்ற பத்திரிகையை படிக்கும்போது அப்படி ஏற்படுவது இல்லை.

மாணவர்கள் MOBILE PHONE-களில் நேரத்தை வீணாக்குவதை விட்டுவிட்டு இது போன்ற அறிவு சார்ந்த பத்திரிகையை படிக்க வேண்டும். இன்றைய போட்டி நிறைந்த உலகத்தில் மாணவர்கள் உலகளாவிய அறிவைப் பெற வேண்டிய அவசியம் இருக்கிறது. உங்களை சுற்றி உள்ள எல்லா துறைகளைப் பற்றிய அறிவையும் நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்று பரிசு பெற இங்கே வந்து இருக்கிறீர்கள் என்பது சாதாரண விஷயம் அல்ல. நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். பரிசு பெறுவது மட்டும் முக்கியம் அல்ல. போட்டிகளில் கலந்து கொள்வதே சிறப்பு தான். அதற்காக ஒரு முயற்சியும் பயிற்சியும் தேவைப்படுகிறது. இது போன்ற போட்டிகளில் மாணவர்கள் பங்கு கொண்டால் அது மற்ற மாணவர்களுக்கும் ஊக்கமாக இருக்கும்.

எல்லா குழந்தைகளும் பிறக்கும் போது ஒரு திறமையோடு தான் பிறக்கிறார்கள். அந்த திறமையை கண்டுபிடித்து அதை வளர்க்க வேண்டியது பெற்றோர்கள், ஆசிரியர்களின் கையில் இருக்கிறது. குழந்தைகளிடம் இருக்கும் திறமையை நாம் அடையாளம் கண்டு அதை ஊக்கப்படுத்தும் போது அவர்களுடைய திறமை வைரம் போல் பட்டை தீட்டப்படுகிறது.

மாணவர்கள் அனைவருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற வாழ்த்துச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.